Parliament of Victoria

# நீங்கள் 60 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவரா?

## அல்லது அந்த வயதுள்ள யாரையாவது தெரியுமா?

விக்டோரியப் பாராளுமன்றமானது, கலாச்சார ரீதியாக வேறுபட்ட சமூகங்களைச் சேர்ந்த வயதான விக்டோரியவாசிகளுக்கு, ஆதரவளிப்பது குறித்து விசாரணை நடத்துகிறது, அத்துடன் அதுபற்றி உங்கள் கருத்துகளையும் கேட்க விரும்புகிறது.

நீங்கள் மகிழ்ச்சியாக வாழ எது உதவும் என்பதுடன் பின்வருவன பற்றிய உங்கள் கருத்துக்களையும், அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ள நாங்கள் உங்களை ஊக்குவிக்கிறோம்:

- நீங்கள் மற்றும் உங்கள் பெற்றோர்/தாத்தா-பாட்டி, தினசரி சந்திக்கும் சில சவால்கள் எவை?
- நீங்கள் உங்கள் சமூகத்தில் பாதுகாப்பாக இருப்பதாக உணர்கிறீர்களா?
- ஆதரவை எங்கே கண்டறியலாம் என்பது உங்களுக்குத் தெரியுமா?
- சேவைகளை எவ்வாறு மேம்படுத்த முடியும்?
- உங்களிடம் கணினி உள்ளதா, மேலும் ஒரு கணினியை எப்படிப் பயன்படுத்துவது என்று தெரியுமா?
- சமூக ரீதியாக, உடல் ரீதியாக மற்றும் மன ரீதியாகச் சுறுசுறுப்பாக இருக்க நீங்கள் என்ன செய்கிறீர்கள்?

உங்களுக்கு விருப்பமான மொழியில் நீங்கள் உங்கள் யோசனைகளைச் சமர்ப்பிக்கலாம். நீங்கள் பின்வருவனவற்றைத் தெரிவு செய்யலாம்:

- ஒரு கடிதம் அல்லது மின்னஞ்சல் வழியாக எழுதலாம்
- எங்கள் கருத்தாய்வைப் பூர்த்திசெய்யலாம், அல்லது
- ஒரு காணொளியில் பதிவு செய்யலாம்.

உங்கள் சமர்ப்பிப்பானது, கலாச்சார ரீதியாக வேறுபட்ட பின்னணிகளைச் சேர்ந்த வயதான விக்டோரியவாசிகளை எவ்வாறு சிறப்பாக ஆதரிப்பது என்பது குறித்த பரிந்துரைகளை, விக்டோரிய அரசாங்கத்திற்குத் தெரிவிக்கும்.

31 ஜனவரி 2022 வரை சமர்ப்பிக்கலாம்.

## மேலும் கண்டறியவும்

மேலதிகத் தகவல்களுக்கு, parliament.vic.gov.au/oldervictorians என்ற இணையதளத்துக்குச் செல்லவும்.

உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், தயவுசெய்து எங்களைப் பின்வரும் மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்: oldervictoriansinquiry@parliament.vic.gov.au அல்லது (03) 8682 2843 என்ற எண்ணைத் தொலைபேசியில் அழைக்கவும்.

அனைத்து சமர்ப்பிப்புகளும் பொது ஆவணங்களாகக் கருதப்படுகின்றன, ஆனால் இரகசியம் காக்கப்பட வேண்டுமென்று நீங்கள் வேண்டுகோள் விடுக்கலாம். உங்கள் தனிப்பட்ட தகவல்கள் வெளியிடப்படமாட்டாது அல்லது பிற அரசு நிறுவனங்களுடன் பகிர்ந்து கொள்ளப்படமாட்டாது.

